20.11.2025 OS.No.71/2012 PW2 Name :.**விஜயசீனிவாசன்**

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. பிரதிவாதி தாக்கல் செய்த கூடுதல் எதிர்வழக்குரை விவரங்கள் தெரியும். அவற்றை நான் என்னுடைய கூடுதல் சாட்சியத்தில் மறுத்து கூறாததற்கு என்ன காரணம் என்றால் சொத்து அவர்களுடையது கிடையாது என்பதால் அதை நான் மறுக்கவில்லை. வழக்கு சொத்து தற்சமயம் ஜீவா, திலகவதி சுவாதீனத்தில் உள்ளது. திலகவதி உரிமைதாரர் இல்லை என்ற காரணத்தினால் அவர்களுடைய எதிர்வழக்குரை கூடுதல் சாட்சியத்தில் மறுக்கவில்லை. 5ம் பிரதிவாதி வெளிநாட்டில் எவ்வளவு நாட்களாக வசிக்கிறார் என்று தெரியவில்லை.
2. ஆனால் ஆலங்காயத்தில் அவர் இல்லை. அவருக்கு ஆலங்காயம் விலாசம் போட்டுதான் வழக்கு நடத்தி வருகிறேன். வழக்கு சொத்து குறித்து 1ம் பிரதிவாதி 6ம் பிரதிவாதி பெயருக்கு பதிவு செய்யபட்ட ஆவணம் ஏற்படுத்தி கொடுத்துள்ளது பற்றி இன்றைய தேதிவரை தெரியாது. 6ம் பிரதிவாதி பதிலில் ஆவண எண் போட்டு அதை குறிப்பிட்டுள்ளதை தெரிந்து கொண்டு தற்போது பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே வாய்மொழி சாட்சியத்தில் நான் ஒருவர் தான் என் பெற்றோருக்கு வாரிசு என கூறியுள்ளேன்.
3. இந்நிலையில் என்ன காரணத்திற்காக என் பெற்றோரிடம் செட்டில்மெண்ட் எழுதி வாங்கினேன் என்றால் அது என் பெயருக்கு

எழுதிவைக்கபட்டுள்ளது. வாசாஆ14 ஆவணத்தில் உள்ள வாசகங்கள் சரியானவை தான். அதில் நான் என் பெற்றோருக்கு மூத்த குமாரர் என எழுதபட்டுள்ளது. மற்ற இளைய குமாரர் யார் என்றால் அவர் முரளிதரன் என்பவர் அவர் என் மாமாவிற்கு தத்து கொடுக்கபட்டுள்ளார். இன்றைய தேதிவரை நான் பெற்றோருக்கு ஒரே மகன் என்று வழக்கு நடத்தி வருகிறேன். முரளிதரன் மனநோயால் பாதிக்கபட்டு பெங்களுர் மருத்துவனையில் 25 ஆண்டுகளாக அனுமதிக்கபட்டுள்ளதால் அவரை பற்றி வழக்கில் கூறவில்லை.

4. அவர் மருத்துவர் என்றால் சரிதான் சிறு வயது முதலேயே அவர் 5 வயதிலிருக்கும்போது என் மாமா தீனதயாளன் என்பவருக்கு தத்து கொடுத்துவிட்டார்கள். அவருடைய ஆவணங்களில் தகப்பனார் பெயர் என்னுடைய தகப்பனார் பெயர்தான் உள்ளது. வாசாஆ14 ஆவணம் நடைமுறைக்கு வந்துவிட்டது. வழக்கு சொத்தின் சுவாதீனம் எங்களிடம் இல்லை திலகவதியிடம் தான் உள்ளது. வாசாஆ14 ஆவணத்தில் வழக்கு சொத்தின் சுவாதீனத்தை என்னிடம் ஒப்படைத்ததாக எழுதியுள்ளது சரியானது தான் பெற்றோர் இறந்ததற்கு பின்னர்தான் வாசாஆ14 ஆவணம் பற்றி தெரியும்.

5. பத்திரத்தின் வாயிலாக சுவாதீனம் ஒப்படைக்கபட்டுள்ளது. வழக்கு சொத்தின் சுவாதீனத்திற்கு உள்ளே செல்லவில்லை. திலகவதி சார்ந்த சொத்தில் வாசாஆ14 ஆவண தேதியில் என் பெற்றோரிடம் சுவாதீனத்தில் இல்லை. சுவாதீனத்தில் இல்லாத சொத்திற்கு தான் என் பெயரில் வாசாஆ15 ஆவணம் பெறபட்டுள்ளது. வாசாஆ14 ஆவணம்

நிலுவையில் வைக்கபட்டு பின்னர்தான் முத்திரை கட்டணம் செலுத்தபட்டுள்ளது என்று தெரியும்.

6. யார் அதை செலுத்தினார்கள் என்று தெரியவில்லை. திலகவதியை வாரிசு அடிப்படையில் தான் வழக்கில் கட்சி சேர்க்கபட்டுள்ளது. ஆரம்பத்திலேயே வழக்கில் கட்சி சேர்க்காமல் இருந்ததற்கு என்ன காரணம் என்றால் சித்ராபதி தான் மனைவி என்ற நினைத்துக்கொண்டோம் பின்னர் தான் திலகவதி பற்றி தெரிந்து கொண்டோம். அவர் ஆண் தான். அவரைதான் மனைவி என நினைத்துகொண்டோம். 4ம் பிரதிவாதி ஆம்பூரில் நிரந்தரமாக வசிக்கிறார் என்பது தெரியாது.

7. பதிலில் அது கூறபட்டுள்ளது பின்னர் தான் அதுபற்றி தெரியும். வழக்கில் மொத்தம் 3 வாதிகள் மட்டும் உள்ளோம். வாதி என்று தான் வழக்கு தொடர்ந்து நடத்துகிறோம். ஏற்கனவே வழக்கு சொத்து குறித்து 2 வழக்கு முடிந்துள்ளது. பதிலில் மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு நிலுவையில் உள்ளதாக கூறியுள்ளார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டபடும் வழக்குரை அந்த வழக்கு சம்மந்தபட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்து குறித்து சந்தோஷ் குமார், சேகர் இருவர் பெயரில் பத்திரம் பதிவாகியுள்ளது பற்றி எனக்கு தெரியாது.

8. எங்களுடைய மூல உரிமையாளர்கள் சத்தியமூர்த்தி, ராகவேந்திரன் ஆவார்கள். செல்விகரசி அவர்களுக்கு வேண்டியவர் கிடையாது. ஏற்கனவே முடிந்த வழக்குகளில் செல்விகரசி தரப்பினர் என்பது தெரியும். வழக்கு சொத்து தொடர்ந்து 40 ஆண்டுகளாக 1, 6 பிரதிவாதிகள்

சுவாதீனத்தில் உள்ளது சரிதான் அன்று முதல் வழக்கு நிலுவையில் தான் உள்ளது. முடிந்த வழக்குகளும் இருந்தது. 2007ல் ஒரு வழக்கும் அதற்கு பின்னர் ஒரு வழக்கும் முடிந்தது.

9. 1984லேயே வழக்கு சொத்து குறித்து பிரதிவாதி பெயரில் ஆவணம் பதிவாகியுள்ளது என்றால் இல்லை. தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. வழக்கில் தாக்கல் செய்யபட்டுள்ளது என நினைக்கிறேன். உண்மையை மறைப்பதற்காக அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 6ம் பிரதிவாதி எதிர்வழக்கரை சங்கதிகள் உண்மையானவை என்பதால் அதை மறுக்கவில்லை என்றால் சரியல்ல.

10. 6ம் பிரதிவாதிக்கு எதிரான வழக்கு காலதோசத்தால் பாதிக்கபட்டுள்ளது என்றால் சரியல்ல. காலம்கடுத்துவற்காக மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 6ம் பிரதிவாதிக்கு தனிபட்ட முறையில் பாத்தியபட்ட சொத்தில் நான் எந்த உரிமையும் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 20/11/2025 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2025.11.20 17:43:35 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.